பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

18 09 2025 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

***தலைப்புச் செய்திகள்***

1. உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு உயர்ந்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
2. பீகார் மாநிலத்தில் வாக்காளர் அதிகார யாத்திரை என்ற பெயரில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி மக்களை திசை திருப்புவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.
3. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், நாட்டின் வரி மற்றும் வருவாய் கட்டமைப்பை நவீனமயமாக்கி, எளிமைப்படுத்தியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
4. சட்ட விரோத மற்றும் போலி வர்த்தகத்திலிருந்து மக்களை பாதுகாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.
5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – ஷிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>>

உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு உயர்ந்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்பு தொடர்பான இரண்டு நாள் தேசிய கருத்தரங்கை தொடங்கிவைத்து பேசிய அவர், தேசிய நலன்கருதி பாதுகாப்புத்துறையில் புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>>

பீகார் மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை அம்மாநிலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, மத்திய அரசு ஆதரவுடன் சிறப்பாக நிறைவேற்றி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தின் பிஜேபி தொண்டர்கள் இடையே உரையாற்றிய அவர், நிதிஷ்குமார் தலைமையிலான அரசின்

மக்கள் நலத்திட்டங்கள் குறித்து ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள், மகளிர் மற்றும் இளையோர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து மக்களிடையே எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி, வாக்காளர் அதிகார யாத்திரை என்ற பெயரில் மக்களை திசை திருப்புவதாகவும் திரு அமித் ஷா குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், நாட்டின் வரி மற்றும் வருவாய் கட்டமைப்பை நவீனமயமாக்கி, எளிமைப்படுத்தியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் இன்று நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த சீர்திருத்தங்கள் குறித்தும், இதனால் அனைத்துத்தரப்பினருக்கும் கிடைக்கும் பயன்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

எட்டாண்டுகளுக்கு முன்பு கொண்டுவரப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்கு முன்னர் இதுகுறித்து விரிவாக அனைத்து மாநிலங்களிடமும் ஆய்வு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

சீர்திருத்தம் செய்யப்பட்ட வரி கட்டமைப்பில், கணிசமான அளவில் வரிகள் குறைக்கப்பட்டிருப்பது அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும் என்று அவர் கூறினார்.

குறைக்கப்பட்ட புதிய வரி விகிதங்களை ஆயுதபூஜைக்கு முன்னரே நடைமுறைக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்ட உறுப்பினர்கள், முக்கிய சேவைகளை பெறுவதற்கான சேவை இணையதளம் Single Login கட்டமைப்பில் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இந்த சேவை குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த அமைச்சர், ஒவ்வொரு தொழிலாளியும் தங்களுக்கான பக்கத்தை Single Login முறையில் எளிமையாக அணுகி,

தங்களுடைய முறையீடுகள் மற்றும் சேவைகளுக்காக பயன்படுத்தலாம் என்று கூறினார்.

Double Login கட்டமைப்பை பயன்படுத்துவதால், காலதாமதம் ஆவதை கருத்தில் கொண்டு, ஒரே பதிவில் சேவைகள் வழங்கப்படுவதால், கால விரையமாவது தடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த சேவை தளத்தில் தங்களது மாதாந்திர பங்குத்தொகை, வைப்பு நிதியிலிருந்து பணம் எடுத்தல் மற்றும் தற்போதுள்ள இருப்பு உள்ளிட்ட விவரங்களை தெரிந்து கொள்வதற்கென தனி மின்னணு பாஸ் புத்தகம் இணைக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர். மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, கடந்த 6 ஆண்டுகளில் சாதனை படைத்துள்ளதாக மத்திய நிதியமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர். Ananth Nageswaran தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் பாரத் வணிக மையத்தின் 125-வது நிறுவன நாள் விழாவில் பேசிய அவர், வரும் 2027-28-ஆம் நிதியாண்டுக்குள் இந்தியாவின் பொருளாதாரம் 5 லட்சம் கோடி

டாலராக அதிகரிக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளதை சுட்டிக்காட்டினார்.

கடந்த 6 ஆண்டுகளில், நாட்டில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அதிக வளர்ச்சியடைந்துள்ளதாக டாக்டர். Ananth Nageswaran குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>

சட்ட விரோத மற்றும் போலி வர்த்தகத்திலிருந்து மக்களை பாதுகாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று போலி வர்த்தகத்துக்கு எதிரான இயக்கம் குறித்த 11-ஆவது மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், அண்மையில் கொண்டுவரப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு மிகுந்த பயனளித்திருப்பதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

மத்திய அரசு அறிவித்த சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் வரவேற்கத்தக்கது என்று உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சீர்திருத்தம் நாட்டிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அளிக்கும் தீபாவளிப் பரிசு என்று கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி மூலம், ஒரே நாடு – ஒரே வரி என்ற அடிப்படையில் பல்வேறு வரிகள் ஒருங்கிணைக்கப்பட்டதாக திரு. யோகி ஆதித்யநாத் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>>

பீகாரில் வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், 25 வயது வரையுள்ள பட்டதாரிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

ஒடிசா மாநிலத்தில் முதலமைச்சர் திரு. மோகன் Charan Majhi தலைமையிலான பிஜேபி அரசுக்கு எதிராக காங்கிரஸ் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ளது.

அம்மாநில சட்டப்பேரவையில் மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாளான இன்று, காங்கிரஸ் கட்சி

உறுப்பினர்கள், பேரவைத் தலைவர் திருமதி. Surama Paadi –யிடம் எழுத்துபூர்வமாக இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்ட வந்தனர்.

அவையில், 14 காங்கிரஸ் உறுப்பினர்களுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு உறுப்பினர் உட்பட 15 பேர் இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

147 உறுப்பினர்களை கொண்ட ஒடிசா சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியாக உள்ள பிஜு ஜனதா தள் கட்சிக்கு 51 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களும் இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>>

உத்ராகண்ட் மாநிலத்தில் மழை வெள்ள நிலைமை குறித்து, முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

பேரிடர் மேலாண்மை துறை செயலர் திரு. வினோத்குமார் சுமன் உள்ளிட்டோர் கலந்து கொண்ட இந்த ஆய்வுக்கூட்டத்தில், மீட்புப் பணிகளை விரைவுபடுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இம்மாநிலத்தின் சமோலி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் 35 வீடுகள் சேதமடைந்ததாகவும், 14 பேரை காணவில்லை என்றும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

விண்வெளி துறையில் எதிர்காலத்தில் எவ்வாறு செயல்படுவது என்பது தொடர்பான திட்டங்கள் குறித்து, இந்திய விண்வெளி வீரர்களும், நாசா விண்வெளி வீரர்களும் இணைந்து வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகத்தில் ஆலோசனை மேற்கொண்டனர்.

கடந்த காலங்களில் இந்தியாவும், அமெரிக்காவும் ஒருங்கிணைந்து செயல்படுத்திய திட்டங்கள் குறித்தும், எதிர்கால ஒத்துழைப்பு குறித்தும் அவர்கள் விவாதம் மேற்கொண்டதாக அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு நிகழ்ச்சியில் பேசிய இந்திய தூதர் திரு. Vinay Kwatra, இந்தியாவின் எதிர்கால விண்வெளி திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இந்தக் கூட்டத்தில் விண்வெளி நிமிடங்கள் என்ற தலைப்பிலான கலந்துரையாடலில் சுபானிஷு சுக்லாவுடன்,

நாசா விஞ்ஞானிகள், சுனிதா வில்லியம்ஸ், Nick Hague மற்றும் Butch Wilmore பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – ஷிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, ***21-13, 21-12*** என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் ***Wang Chi Lin – Chiu Hsiang Chieh*** இணையை வென்றது.

-----------------

உலக ***Speed*** ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ***Anish Raj*** வெண்கலப்பதக்கம் வென்றார்.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஜூனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ***2*** தங்கம் ***2*** வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

-------------

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியா – ஸ்ருதி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

----------------

கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய சாஃப்ட் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

----------------

*16* வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மகளிர் கூடைப்பந்து போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா *65*-க்கு *53* என்ற புள்ளிக்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.

<<<<<<END>>>>>>>